## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.25/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாஞ்சாலை | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 65 | கிராமம் | : தெக்களூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**21.03.2025**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பிறந்த ஊர் என்ன என்றால் ஆர்.கே.பேட்டை புதூர் ஆகும். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 13 வயதில் திருமணம் ஆனது. தற்போது 65 வயதுக்கு மேல் ஆகிறது. என் கணவர் பெயர் என்ன என்றால் மணி (எ) சுப்பிரமணி ஆகும். சுப்பிரமணி ரெட்டிக்கு உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 நபர்கள் ஆவார்கள். 1. மணி என்ற சுப்பிரமணி, 2. நடேசன், 3. பாமா ரெட்டி ஆவார்கள். மொத்தம் எத்தனை பேர் என்றால் மொத்தம் 6 பேர். 3 ஆண், 3 பெண். 4. ராணியம்மாள், 5. கஸ்தூரி, 6. முனியம்மாள் ஆவார். ராணியம்மாளுக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் நான் திருமணமாகி வந்த பிறகுதான் 3 பெண் மக்களுக்கும் திருமணம் ஆனது.

2. ராணியம்மாளுக்கு என்ன வயதிருக்கும் என்றால் 50 வயதிருக்கும். ராணியம்மாளுக்கு திருமணமாகி 45 வருடமிருக்கும் என்றால் சரிதான். அதன் பின்பு கஸ்தூரிக்கு திருமணம் ஆனது என்றால் ஆமாம். 2 வருடம் கழித்து திருமணம் நடந்தது. அதன் பின்பு முனியம்மாளுக்கு திருமணம் ஆனது என்றால் சரிதான். ரமேஷ் தெரியுமா என்றால் தெரியும். ரமேஷின் மனைவி பெயர் பாரதி ஆகும். பாரதி எனக்கு என்ன உறவு என்றால் மச்சினன் நடேசனின் மகள் ஆவார். ரமேஷ்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பொய்யானதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. பாஞ்சாலை, ராஜாத்தி, ராணியம்மாள், கஸ்தூரி, முனியம்மாள், பாலாஜி ஆகியோர் மீது ரமேஷ் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பாலாஜி எனது மகன் என்றால் சரிதான். ராஜாத்தி எனது மகள் ஆவார். கஸ்தூரி, முனியம்மாள், ராணியம்மாள் எனது நாத்தனார்கள் ஆவார்கள். ராணியம்மாள் கணவர் பெயர் வெங்கடேசன் என்றால் சரிதான். கஸ்தூரியை எங்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் ஆர்.கே.பேட்டை புதூரில் ஆறுமுகம் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள். முனியம்மாள் எங்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் ஆர்.கே.பேட்டை புதூரில் ஆதிமூலம் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள். நாங்கள் அனைவரும் பயிர் தொழில் செய்கிறோம் என்றால் பயிர் தொழிலை கூட்டு குடும்பமாக செய்கிறோம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)